## நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

## C.C. No. 262/2019

## வழக்கு சாட்சி – அ.சா. 12

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலாவதி | ஜாதி | |
| தந்தை /கணவர் பெயர் | பெரியமாயி | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | அல்லிநகரம் | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | <u>தேனி</u> | வயது | 60/25 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.06.2025.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை:–**</u>

நான் தற்போது தேனி, அல்லிநகரத்தில் வசித்து வருகிறேன். சுமார் 6 வருடத்திற்கு முன்பாக எனது கொழுந்தன் மகள் பவித்ராவின் வளைகாப்புக்காக தேனியில் இருந்து போடிக்கு 21 நபர்கள் வேனில் சென்றுவிட்டு திரும்பி வரும்போது மேற்கில் இருந்து கிழக்காக வந்துகொண்டிருக்கும்போது மதியம் 2.30 மணியளவில் தீர்த்தத்தொட்டி அருகில் முருகன் கோவில் பக்கத்தில் தனியார் பேருந்து அதிகவேகமாக கட்டுப்பாடு இல்லாமல் வந்து நாங்கள் சென்றுகொண்டிருந்த வேன் மீது மோதியது. அதில் எங்களது வேன் 4–5 முறைகள் சுழன்று விழுந்தது. விபத்தில் சம்பவ இடத்திலேயே வெற்றியரசன், சிற்றரசன், சரஸ்வதி, பேச்சியம்மாள் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள். மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் லீட்டா என்பவர் இறந்தவிட்டார். எனக்கு தலை, கை, தொடை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. லதா, சுபா, கவிதா,

பவித்ரா, பாக்கியம், விஜி, கருப்பாயி, மற்றும் வாகனத்தில் வந்த மற்ற நபர்களுக்கும் காயம் ஏற்பட்டது. பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்ட எங்களை க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள். விபத்தில் எங்களுக்கு எதிரே வந்த வாகனத்தில் இருந்த ஜக்கமாள் என்பவர் இறந்துவிட்டார். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிவந்த நபரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். **(எதிரியின் அடையாளம் பற்றி எதிரி தரப்பில் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை.** )

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.

எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை. எனவே குறுக்கு விசாரணை இல்லை எனக் கருதி முடிக்கப்பட்டது.